பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 18 வியாழக்கிழமை 04.11.2021 கதிர் 227

## வவுனியாவில் மேலும் 16 பேருக்குத் தொற்று

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் 4 சிறுவர்கள் உட்பட 16 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். 2

# யாழில் சிறுவர் குழுவினரால் வாள்வெட்டு; 10 பேர் சிக்கினர்

## பொலிஸார் அதிர்ச்சித் தகவல்



யாழ்ப்பாணத்தில் சிறுவர்களால் நடத்தப்பட்ட வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். அத்துடன் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 10 சிறுவர்கள் யாழ். குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். நாவாந்துறைப் பகுதியில் அண்மையில் 14 வயது சிறுவன் மீது 10 பேர் கொண்ட அணி ஒன்று வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டது. அதில் அச்சிறுவன் காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் 2



## நாடு திரும்பினார் ஜனாதிபதி கோட்டா

ஸ்கொட்லாந்தின் க்ளாஸ்கோ நகரில் நடைபெற்ற காலநிலை மாற்றம் தொடர்பான அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பினார். 2

## பயணப் பையில் பெண்ணின் சடலம்

சப்புகஸ்கந்த பகுதியில் பயணப் பையொன்றிலிருந்து சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. 2

## 3,400 கிலோ மஞ்சளுடன் வந்த இந்திய மீனவர்கள் ஐவர் கைது





(ந.லோகதயாளன்)

புத்தளம் கடற்பரப்புக்குள் மஞ்சளுடன் உள்நுழைந்த இந்திய மீனவர்கள் ஐவரைக் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர். 2

## மஞ்சள் கடத்த முயன்ற மூவர் மன்னாரில் கைது

(ந.லோகதயாளன்)



தமிழகத்தில் இருந்து மன்னார் கடல் வழியாக மஞ்சள் கடத்த முயன்ற மூவர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் கடற்பரப்புக்குள் மஞ்சளுடன் உள்நுழைந்த மன்னாரைச் சேர்ந்த ஒரு விசைப்படகில் பயணித்த மன்னார் 2

## மன்னாரில் இருவர் சிக்கினர்

தலைமன்னாரில்இருந்து நேற்றிரவு 9.30 மணியளவில் கொழும்பு நோக்கிப் பயணித்த இலங்கை அரச போக்குவரத்து சேவைக்குச் சொந்தமான பஸ்ஸில் சுமார் 250 கிராம் எடை கொண்ட ஐஸ் ரக போதைப்பொருளை தம் வசம் மறைத்து வைத்திருந்து கடத்திச் செல்ல முற்பட்ட புத்தளம் மற்றும் சிலாவத்துறைப் பகுதிகளைச் சேர்ந்த 2 சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். 2

## மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக பல்வேறு மாவட்டங்களுக்குப் பிறப்பிக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாயம் தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளது.

மாத்தளை, பதுளை, இரத்தினபுரி, நுவரெலியா, கேகாலை, கண்டி, களுத்துறை மற்றும் காலி 2



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## வவுனியாவில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் தனிமைப்படுத் தப்பட்டோரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோத னையின் முடிவுகள் சில வெளியாகி யுள்ளன.

அதில், நெடுங்குளம் பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 வயதுடைய இரு சிறுவர்களுக்கும், பரசங்குளம் பகுதியைச் சேர்ந்த 3 வயது சிறுமி ஒருவருக்கும், கணேசபுரம் பகுதி யைச் சேர்ந்த ஒரு வயது சிறுவன் ஒருவருக்கும் என 4 சிறுவர்கள் உட்பட 16 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து தொற்றாளர்களைச் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப் பதற்கும், அவர்களுடன் தொடர்புடை யவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## மன்னாரில் இருவர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் பிரகாரம் மன்னார் நகரின் பிரதான வீதிப் பகுதியில் வைத்து குற்றத்தடுப்புப் பொலிஸார் குறித்த பஸ்ஸில் சோதனைகளை மேற் கொண்டபோது குறித்த இரு சந்தேக நபர்களும் ஐஸ் ரக போதைப்பொரு ளுடன் கைதுசெய்யப்பட்டனர்.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுல வீரசிங்கவின் பணிப்பில், உதவி பொலிஸ் அத்தி யட்சகர் சஞ்சீவ பண்டார மற்றும் மன் னார் மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி குமாரபள்ளேவள, உப பொலிஸ் பரிசோதகர்களான ராம நாயக்க, வணசிங்க தலைமையிலான அணியினரே மேற்படி ஐஸ் போதைப் பொருளைக் கைப்பற்றினர்.

## மண்சரிவு அபாய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டங்களுக்கு இவ்வாறு மண் சரிவு அபாயம் நீடிக்கப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதியில் வாழும் மக் கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

## யாழில் சிறுவர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்க்கப்பட்டார். இது தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் முறைப்பாடு பதிவு செய்யப் பட்டது.

முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் சம்பவத்துடன் தொடர் புபட்டனர் என்று முறையிடப்பட்ட 10 பேரையும் நேற்றுக் கைதுசெய்தனர். இதில் கைதுசெய்யப்பட்டவர்கள் அனை வரும் சிறுவர்கள் என்ற அதிர்ச்சிச் செய் தியை பொலிஸார் வெளியிட்டமையுடன் அவர்கள் அனைவரும் 14 தொடக்கம் 17 வயதுக்குட்பட்டவர்கள் எனவும், அவர் கள் யாழ். நகரம், நாவாந்துறை, அத்தி யடி, நல்லூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந் தவர்கள் எனவும், கைதுசெய்யப்பட்ட வர்களிடமிருந்து வாள், கைக்கோடாரி என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழில் இளைஞர்களின் அடாவடி மற்றும் வாள்வெட்டு வன்முறைகள் கட்டுப்பாடு இன்றி நடைபெற்றுவரும் நிலையில் சிறுவர்கள் கூரிய ஆயுதங் களை உடைமையில் வைத்து குழுவாக இணைந்து இப்படிப்பட்ட வாள்வெட்டு வன்முறையில் ஈடுபட்டமையானது பொலிஸார் மற்றும் பொதுமக்கள் மத்தி யில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள் ளது.

குறித்த கைது நடவடிக்கைகள் யாழ். குற்றத் தடுப்புப் பிரிவு பதில் பொறுப்பதி காரி குமாரபேலி தலைமையில் பொலிஸ் உத்தியோகத்தர்களான விஜயகாந்த், கபில்தாஸ், செனரத்னா, கஜன், போன்றவர்களால் மேற்கொள்ளப் பட்டன.

கைதுசெய்யப்பட்ட சிறுவர்கள் அனைவரும் சிறுவர் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

## பயணப் பையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்கு அருகில் உள்ள குப்பை கிடங்கு ஒன்றிலிருந்து குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் பெண்ணொருவர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித் துள்ளார்.

எனினும், சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் அடையாளங்கள் உறுதிப் படுத்தப்படாத நிலையில் சப்புகஸ்கந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 3,400 கிலோ .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் நிலவும் மஞ்சள் தட் டுப்பாட்டையடுத்து தமிழகத்திலிருந்து மஞ்சள் கடத்தும் நடவடிக்கை அதிகரித்து வருகின்றது. இந்நிலையில், நேற்று தமிழகத்தில் இருந்து ஒரு நாட்டுப் படகில் கடத்தி வரப்பட்ட 3 ஆயிரத்து 400 கிலோகிராம் மஞ்சளே கடற்படை யினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் ஐவரும் புத்தளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமிழகம் - தூத்துக்குடிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





## நாடு திரும்பினார் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை 8.30 மணியளவில் எமிரேட்ஸ் விமானம் மூலம் ஜனாதிபதி மற்றும் அவரது பாரியார் ஆகியோர் நாட்டை வந்தடைந்தனர்.

காலநிலை மாற்றம் தொடர்பான அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள் வதற்காக ஜனாதிபதி கடந்த 30ஆம் திகதி ஸ்கொட்லாந்து பயணமாகியிருந் தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மஞ்சள் கடத்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீனவர்கள் மூவர் கடற்படையினரால் இன்று காலை கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்க ளிடம் இருந்து 376 கிலோகிராம் மஞ் சளும் கடற்படையினரால் மீட்கப்பட்டது.




## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல் களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தடம் மாறும் கூட்ட நோக்கு

**அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்தும்படி இலங்கையை வற்புறுத்துமாறு தமிழர்கள் தரப்பு எல்லாம் சேர்ந்து இந்தியாவைக் கோர வேண்டும் என்று ஒரு முயற்சி முன்னெடுக்கப்பட்டது.**

**தமிழ்க் கூட்டமைப்பின்பங்காளிக் கட்சியான ரெலோ அதற்கான முன்முயற்சிகளை ஆரம்பித்தது. மனோ கணேசன், ஹக்கீம்போன்ற தென்னிலங்கைத்தலைவர்களையும் அழைத்து யாழ்ப்பாணத்தில் கடந்த 2ஆம் திகதி ஆரவார ஏற்பாடுகளுடன் கூட்டமும் நடந்தது. ஆனால் இந்த கூட்டத்தில் தமிழர் தரப்பின் பிரதான கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியோ மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியோ பங்குபற்றவில்லை. ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் நேரில் சென்று அழைப்பு விடுத்தும், அவர் அதில் பங்குபற்றவில்லை. தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசாவோ, பிற தமிழர் தலைவர்களோ கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.**

**இவ்விடயத்தில் சம்பந்தனின் நிலைப்பாடு தெளிவானது.**

**“பிரதமர் இந்திரா காந்தி காலத்திலிருந்து இந்தியத் தரப்புடன் –இந்தியப் பிரதமர்களுடன் – இவ்விடயங்கள் குறித்து நேரடியாகவே பேசி வருகின்றோம். அவர்களுக்கான நமது கோரிக்கையை நாம் நேரிலேயே அவர்களிடம் கூறலாம். அல்லது கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் மூலம் தெரியப்படுத்தலாம். அது குறித்து நாங்கள் கூட்டம் கூடி, ஆராய்ந்து, தீர்மானம் எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதல்ல. 13ஐயும் தாண்டி ‘13 பிளஸ்’ நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று பிரதமர் மன்மோகன்சிங்கும் பிரதமர் நரேந்திர மோடியும் என்னிடமே நேரடியாக கூறியுள்ளனர். அத்தோடு ‘13 பிளஸ்’ கொடுப்போம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே இந்தியா உட்பட பல உலக நாடுகளின் தலைவர்களிடம் கூறியுள்ளார். அப்படி இருக்கையில் நாம் ஏன் 13ஐ வலியுறுத்த வேண்டும்? அது இந்தியாவாகவே இலங்கையுடன் ஒப்பந்தம் செய்து, அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்டது. அதை நடைமுறைப்படுத்த வேண்டியது இந்தியாவின் கடப்பாடு; பொறுப்பு; தார்மீக கடமை. அதை நிறைவேற்றும்படி நாம் இந்தியாவைக் கோர வேண்டியதில்லை. அது இந்தியா முதல்படியாகத் தானே நிறைவேற்றக் கடப்பாடு உடைய விடயம்” – என்பது சம்பந்தனின் தெளிவான – உறுதியான – நிலைப்பாடு.**

**ஆனால் யாழ்ப்பாணத்தில் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றிய மனோகணேசனும் ஹக்கீமும் இந்த கூட்டத்தின் நோக்கத்தை பரவலாக்கி திசை திருப்பி விட்டனர்.**

**அவர்களே இந்தக் கூட்டத்தின் அடுத்த தொடர் கொழும்பில் நடைபெறும் போது, அதில் பங்குபற்றும் படி சம்பந்தனை நேரில் சந்தித்து வலியுறுத்தப் போகின்றார்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள்.**

**நல்லது. இந்த கூட்டம் தமிழர் – முஸ்லிம் ஐக்கியப்பாட்டுக்கானது என்று ஹக்கீம் அர்த்தம் காண்பிக்கின்றார்.**

**தமிழ்ப் பேசும் தரப்புக்கள் – தமிழர்களும் முஸ்லிம்களும் – குறைந்தபட்ச பொது வேலைத் திட்டமொன்றை தயாரிப்பதற்கான கூட்டம் என்கின்றார் மனோ கணேசன்.**

**இந்த இரண்டுக்குமான – இரண்டு நோக்கங்களையும் எட்டுவதற்கான கூட்டம் இது என்று குறிப்பிட்டு, அதுவும் நேரடியாக மனோ கணேசனும் ஹக்கீமும் சென்று சம்பந்தனை அழைத்தால் கொழும்பில் 12ஆம் திகதி அளவில், இத்தொடரின் அடுத்த கூட்டம் நடக்கும்போது அதில் சம்பந்தன் நிச்சயம் பங்குபற்றுவார்.**

**தமிழர் – முஸ்லிம் ஐக்கியத்துக்கான கூட்டம் என்ற பெயரிலும், தமிழர் தரப்புகளின் குறைந்தபட்ச பொது வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கான சந்திப்பு என்ற கோதாவிலும் அதற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்குவார் சம்பந்தன்.**

**ஆனால், 13 ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துமாறு இந்தியாவைக் கோரும் கோரிக்கை அப்போது அடிபட்டுப் போய்விடும். இதுதான் யதார்த்த நிலைமை .**

## நாடாளுமன்ற பாதுகாப்பை அதிகரிப்பதற்குத் தீர்மானம்

நாடாளுமன்றுக்கு வழங்கப்படும் பாதுகாப்பை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது நாடாளுமன்றின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றின் பாதுகாப்பை அதிகரிக்கவும், சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளைப் பலப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என நாடாளுமன்றின் படைக்கள சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதன்படி, 8 ஆம் திகதி நாடாளுமன்றம் வருவோருக்கு ரெபிட் அன்டிஜன் பரிசோதனை நடத்தப்பட உள்ளது.

நாடாளுமன்ற பொதுச் செயலாளர் அலுவலக பணியாளர்கள், ஏனைய அலுவலக பணியாளர்கள், நாடாளுமன்ற ஊடகவியலாளர்கள் மற்றும் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட உள்ளனர். எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 9 மணிமுதல் 12 மணிவரையில் பரிசோதனை நடத்தப்பட உள்ளது. வரவு – செலவுத் திட்ட யோசனை எதிர்வரும் 12 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காங்கேசன்துறை – கல்கிஸை இடையிலான காலை நேர ரயில் சேவை ஆசன முற்பதிவு

காங்கேசன்துறை – கல்கிஸை இடையிலான காலை நேர ரயில் சேவைக்கான ஆசன முற் பதிவுகள் நேற்று முதல் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன என்று யாழ்ப்பாணம் ரயில் நிலைய தலைமை அதிபர் ரி.பிரதீபன் அறிவித்துள்ளார்.

காங்கேசன்துறையிலிருந்து அதிகாலை 5.30 மணிக்கும் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்திலிருந்து 6.10 மணிக்கும் சேவையை ஆரம்பிக்கும் குளிரூட்டப்பட்ட ரயில் சேவை இன்று முதல் சேவையை மீள ஆரம்பித்துள்ளது என்று அவர் குறிப் பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும் என இருரயில்சேவைகள் இடம்பெறவுள்ளன.

## ஐ.எஸ். அமைப்புடன் தொடர்பு; 12 இலங்கையர்கள் கைது

ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்பு வைத்திருந்த 12 இலங்கையர்கள் பயங்கரவாத புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்திய புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்ட ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் இவர்கள் தொடர்பு வைத்திருந்தமை உறுதியாகி உள்ளது.

சந்தேக நபர்கள் பயங்கரவாத சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றனர் எனப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இந்தியாவில் கைது செய்யப்பட்ட மொஹமட் மொஹிதீன் என்ற ஐ.எஸ். பயங்கரவாதியுடன் தொடர்பு வைத்திருந்த இலங்கையர்களை கைது செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்திய பொலிஸ் புலனாய்வு பிரிவினால் கைது செய்யப்பட்ட மொஹமட் மொஹிதீன் என்ற ஐ.எஸ். பயங்கரவாதியின் கையடக்க தொலைபேசியில் 70 பேரின் கையடக்க தொலைபேசி இலக்கங்கள் பதிவாகியுள்ளன.

இந்த நபர்கள் தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்துமாறு இந்திய உள்துறை அமைச்சு இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. இந்த 70 பேரும் இலங்கையர்கள் எனவும் அவர்கள் வட்ஸ்அப் குழுவொன்றில் இணைந்துள்ளனர் எனவும் அதில் பயங்கரவாதம், தொடர்பான வீடியோக்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பிரதானியான சஹ்ரானின் வீடியோக்களும் பகிரப்பட்டுள்ளன எனப்படுகிறது.

## கொழும்பில் திடீரென மூடப்படும் கடைகள் உரிமையாளர்கள் கடும் அதிருப்தி தெரிவிப்பு

எரிவாயு இன்றி பாரிய நெருக்கடியை சந்திக்க நேரிட்டுள்ளதாக கொழும்பு புறக்கோட்டை உணவு கடைகளின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்தநிலைமை காரணமாக கடைகளை மூட நேரிட்டுள்ளதாக உரிமையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். புறக்கோட்டையில் உள்ள உணவு கடைகள், ஹோட்டல்கள் மற்றும் தேநீர் கடைகள் திடீரென மூடப்பட்டு வருகின்றன எனத் தெரிய வருகிறது. கொரோனாவுக்கு பின்னர் திறக்கப்பட்ட கடைகள் தற்போது மீண்டும் மூடப்பட்டு வருகின்றன என ஐக்கிய நாடுகளின் சுயதொழில் வர்த்தகர்கள் சங்கத்தின் செயலாளர் கிரிஷான் மாரபே தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதேவேளை எரிவாயு தட்டுப்பாடு காரணமாக மண்ணெண்ணை வாங்குவதற்கு மக்கள் கடும் பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்காக நீண்ட வரிசையில் காத்திருந்து மண்ணெண்ணெய் வாங்கும் காணொலிகள் வெளியாகி இருந்தன.

## வவுனியாவில் ஆலயத்துக்கு வழிபட சென்ற பெண்ணின் சங்கிலி அறுப்பு

வவுனியா – உக்குளாங்குளம் பகுதியில் ஆலயத்துக்கு வழிபடச் சென்ற பெண் ஒருவரிடம் சங்கிலியை அறுத்துக் கொண்டு இருவர் தப்பிச் சென்றுள்ளனர் என வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது – வவுனியா– உக்குளாங்குளம் பகுதியில் உள்ள சிவன் ஆலயத்தில் வழிபாடு மேற்கொள்வதற்காகப் பெண் ஒருவர் சென்றுள்ளார்.

இதன்போது ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அந்தப் பெண்ணை ஆலயம் அருகில் வழிமறித்து ஒருவருடைய பெயரைக் கூறி ஆலயத்தில் குறித்த நபர் உள்ளாரா எனக் கேள்வி எழுப்பிய போது, அவர் பதில் அளிக்க முற்படுகையில் அவர் அணிந்திருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு இருவரும் தப்பிச் சென்றுள்ளனர்.

மேற்படி பெண் அணிந்திருந்த மூன்று பவுண் தங்கச் சங்கிலியே இதன்போது அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் வவுனியா பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வர்ஜீனியா வாக்கெடுப்பில் குடியரசுக் கட்சிக்கு வெற்றி



வர்ஜீனியாவின் அடுத்த ஆளுநராக குடியரசுக் கட்சியைச் சேர்ந்த கிளென் யங்கின் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என அமெரிக்க ஊடகங்களின் கணிப்புகள் தெரிவிக்கின்றன. 99% வாக்குகள் எண்ணப்பட்டுள்ள நிலையில் அவர் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த டெர்ரி மெக்அலிஃப்பை விட 2.1 புள்ளிகள் முன்னிலையில் உள்ளார். இந்த வாக்கெடுப்பு ஜோ பைடனின் ஜனாதிபதி பதவிக்கான வாக்கெடுப்பாக பரவலாகக் கருதப்படுகிறது, விர்ஜினியாவில் ஒரு வருடத்திற்கு முன்பு நடந்த ஜனாதிபதி தேர்தலில் ஜோ பைடன் 10 புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

# இங்கிலாந்து மீன்பிடிப் படகு தொடர்ந்தும் பிரெஞ்சு வசம்

கடந்த வாரம் பிரான்ஸால் கைப்பற்றப்பட்ட ஒரு பிரிட்டிஷ் இழுவை படகு, சுற்றுச்சூழல் செயலாளரின் பரிந்துரைகளை மீறி, லு ஹார்வில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

சாட்டிவரும் நிலையில் பிரெஞ்சு துறைமுகங்களில் பிரித்தானிய படகுகளை தடுப்பதன் மூலம் பதிலடி கொடுப்பதாக அச்சுறுத்தியது.

அத்தோடு பிரிட்டிஷ் பொருள்கள்



பிரித்தானிய கடற்பரப்பில் பிரான்ஸின் படகுகள் மீன்பிடிக்க அனுமதிக்கும் உரிமம் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர ரீதியிலான மோதல் இடம்பெற்று வருகின்றது.

தமது மீனவர்களுக்கு பிரித்தானியா அனுமதி மறுப்பதாக பிரான்ஸ் குற்றம் மீதான எல்லை சோதனைகளை பிரான்ஸ் மேலும்கடுமையாக்கியுள்ளது. பிரெக்சிட்டிற்குப் பிந்தைய ஒப்பந்தத்தில் தாம் உறுதியாக இருப்பதாகவும் பிரான்ஸ் தனது அச்சுறுத்தல்களை வாபஸ் பெறாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரித்தானியா வலியுறுத்தியது.

# தைக்ரே மோதலில் போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டிருக்கலாம் என்கிறது ஐ.நா.



எத்தியோப்பியா – தைக்ரே மோதலில் அனைத்துத் தரப்புகளும் சர்வதேச மனித உரிமைகளை மீறியுள்ளன என்றும் அவற்றில் சில மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களாக இருக்கலாம் என்றும் புதிய அறிக்கை கூறுகிறது.

எத்தியோப்பிய மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் இணைந்து நடத்திய விசாரணையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் 4 ஆம் திகதி எத்தியோப்பிய பிரதமர், தைக்ரேயில் பிராந்திய படைகளுக்கு எதிராக தாக்குதலை நடத்த உத்தரவிட்டதை அடுத்து யுத்தம் தொடங்கியது.

இதில் சர்வதேச மனித உரிமைகள் பாரிய அளவில் மீறப்பட்டுள்ள நிலையில் போர்நிறுத்தத்திற்கு மனித உரிமைகள் ஆணையாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

சட்டவிரோத கொலைகள் மற்றும் நீதிக்கு புறம்பான மரணதண்டனைகள், சித்திரவதை அகதிகளுக்கு எதிரான மீறல்கள் இடம்பெற்றுள்ளன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை, குடிமக்களின் கட்டாய இடப்பெயர்வு உள்ளிட்ட தொடர்ச்சியான மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களை அறிக்கை விவரிக்கிறது.

1,300 க்கும் மேற்பட்ட கற்பழிப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றும் மேலும் பல சம்பவங்கள் குறித்து முறைப்பாடு வழங்கப்படவில்லை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நவம்பர் 2020 முதல் ஜூன் வரை ஆவணப்படுத்தப்பட்ட பெரும்பாலான மீறல்கள் எத்தியோப்பியன் மற்றும் எரித்திரியா படைகளால் செய்யப்பட்டன எனத் தெரிகிறது.

# எத்தியோப்பியா கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக நகரை பாதுகாக்க பொதுமக்களுக்கு அழைப்பு



கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக நகரை பாதுகாக்க ஆயுதங்களைப் பதிவுசெய்து, தயாராக இருக்க வேண்டும் என எத்தியோப்பிய அதிகாரிகள் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

கிளர்ச்சியாளர்கள்நகரத்தை நோக்கி முன்னேறக்கூடும் என்ற அச்சத்திற்கு மத்தியில் எத்தியோப்பிய தலைநகரான அடிஸ்அபாபாவில்உள்ள அதிகாரிகள், இந்த அறிவிப்பை விடுத்துள்ளனர்.

அடிஸ்அபாபாவில் இருந்து சுமார் 400 கி.மீ. தொலைவில் உள்ள இரண்டு நகரங்களை கைப்பற்றியதாக தைக்ரே மக்கள் விடுதலை முன்னணி அறிவித்து இரண்டுநாள்களின் பின்னர் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தலைநகரில் ஐந்து மில்லியனுக்கும்அதிகமானமக்கள் இருக்கும்நிலையில்நாடளாவிய ரீதியில் அவசரகால நிலையை மத்திய அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

மேலும் அடிஸ் அபாபாவை கைப்பற்றமுயற்சிக்கவேண்டாம் எனகிளர்ச்சியாளர்களை அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

உள்நாட்டுப் போர் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளதோடு 20 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். 4 லட்சம் மக்கள் பஞ்சத்தில் வாழ்ந்து வருவதாக ஐ.நா. மதிப்பிட்டுள்ள தைக்ரேயின் முற்றுகையை உடைக்க விரும்புவதாக தைக்ரே மக்கள் விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

பிரதமர் அஹ்மத் அபியின் அரசியல் சீர்திருத்தங்கள் காரணமாகஆரம்பத்தில்வீழ்ந்த அரசாங்கத்திற்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான சர்வதேச முயற்சிகள் இதுவரை தோல்வியடைந்துள்ளன.

# முகங்களை அடையாளம் காண மென்பொருளை பயன்படுத்தப் போவதில்லை என அறிவித்தது பேஸ்புக்

படங்கள் மற்றும் வீடியோக்களில் முகங்களை அடையாளம் காண பயன்படுத்தப்படும் (facial recognition software) மென்பொருளை பயன்படுத்தப்போவதில்லை என பேஸ்புக் அறிவித்துள்ளது.

முகத்தை அடையாளம் காணும் தொழில்நுட்பத்தின் நெறிமுறைகள் பற்றிய கவலைகள் அதிகரித்ததை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதற்கான தெளிவான விதிகளை கட்டுப்பாட்டாளர்கள் இன்னும் வழங்கவில்லை என்று நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக அதன் பயனர்கள் மீதான தாக்கம் குறித்து சரமாரியான விமர்சனங்களை பேஸ்புக் நிறுவனம் எதிர்கொண்டது.

# கலால் வரி குறைப்பின் எதிரொலியாக சென்னையில் குறைந்த எரிபொருள் விலை




தீபாவளியை முன்னிட்டு பெற்றோல் மீதான கலால் வரி 5 ரூபாவும், டீசல் மீதான கலால் வரி 10 ரூபாவும் குறைக்கப்படுவதாக இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது. இதனையடுத்து மாநில அரசுகளும் எரிபொருள் மீதான வற் வரியை குறைத்து, நுகர்வோருக்கு ஏற்பட்டிருக்கும் சுமையை குறைக்க வேண்டும் என இந்திய மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. பெற்றோல், டீசல் மீதான வரிக்குறைப்பு பிரதமர் மோடியின் தீபாவளிப் பரிசு என பா.ஜ.க. தலைவர் ஜெ.பி.நட்டா கூறியுள்ளார். இம்முடிவால் விலைவாசியும் குறையும் என அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கொடுத்த அழுத்தத்தின் எதிரொலியாக கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பது குறித்து விவாதிக்க எண்ணெய் வள நாடுகளின் அமைப்பான ஒபெக்கின் கூட்டம் நடைபெறுகிறது. உற்பத்தியை அதிகரிக்க முடிவெடுக்கப்பட்டால் அடுத்துவரும் நாள்களில் பெற்றோல், டீசல் விலை குறையக்கூடும் என்றும் உற்பத்தி அதிகரிக்கப்படாவிட்டால் பெற்றோல், டீசல் விலை மீண்டும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. மத்திய அரசின் கலால் வரி குறைப்பு அறிவிப்பை அடுத்து சென்னையில் பெற்றோல் விலை லீற்றருக்கு 5 ரூபா 26 சதத்தாலும், குறைந்து ரூபா 101.40 ஆகவும், டீசல் விலை லீற்றருக்கு 11 ரூபா சதங்கள் குறைந்து 91 ரூபா 43 சதமாகவும் உள்ளது.

## காங்கிரஸின் வெற்றிக்குப் பின்னால் ஒரு புதிய காற்று வீசுவதாக சிதம்பரம் கருத்து



பாரதிய ஜனதாவை எதிர்க்கும் எதிர்க்கட்சிகளுக்கு மக்களிடையே இன்றும் மரியாதை இருப்பதாக காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இமாச்சலப்பிரதேசம், மகாராஷ்ட்ரா, ராஜஸ்தான், கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் 30 சட்டப்பேரவைத் தொகுதிகளில் நடைபெற்ற இடைத்தேர்தல் முடிவுகளைச் சுட்டிக்காட்டி ப.சிதம்பரம் இவ்வாறு கூறியிருக்கிறார். காங்கிரஸின் வெற்றிக்குப் பின்னால் ஒரு புதிய காற்று வீசுவதாகவும், அது வலிமையையும் வேகத்தையும் பெறுமா என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும் என்றும் சிதம்பரம் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த ஆண்டு சில மாநிலங்களில் நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் காற்று எந்தப் பக்கம் வீசும் என்று எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், 30 தொகுதி இடைத்தேர்தல் முடிவுகள் பற்றிய பகுப்பாய்வுகள், சிந்தனையைத் தூண்டும் வகையில் இருக்கின்றன எனவும் குறிப்பிட்டார். காங்கிரஸ் 8 இடங்களிலும், பாரதிய ஜனதாவை எதிர்க்கும் கட்சிகள் 7 இடங்களிலும் வெற்றி பெற்றதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## காஷ்மீர் எல்லையில் இராணுவ வீரர்களுடன் தீபாவளியைக் கொண்டாடிய பிரதமர் மோடி



இந்தியப் பிரதமர் மோடி ஒவ்வொரு ஆண்டும் தீபாவளியை, எல்லைப்பகுதியில் உள்ள இராணுவ வீரர்களுடன்சேர்ந்துகொண்டாடுவதை வழக்கமாக வைத்துள்ளார். பிரதமராக பதவியேற்ற முதல் ஆண்டில் சியாச்சின் சென்று வீரர்களுடன் தீபாவளிப் பண்டிகையை அவர் கொண்டாடி யிருந்தார்.

இந்த ஆண்டு ஜம்மு காஷ்மீரின் ரஜோரி மாவட்டத்தில் உள்ள எல்லைப்பகுதிக்கு இராணுவ உடை அணிந்து சென்ற பிரதமர் மோடி, நவ்ரோ பிரிவில் உள்ள வீரர்களுடன் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடினார். பணியின் போது உயிரிழந்த வீரர்களின் நினைவிடத்தில் பிரதமர் மோடி மரியாதை செலுத்தினார். பின்னர் இராணுவ வீரர்களிடையே அவர் உரையாற்றினார்.

பிரதமர் வருகையையொட்டி அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதெனினும் அவர் சென்ற பாதையில் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் எதுவும் விதிக்கப்படவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன. பூஞ்ச்- ரஜோரி பகுதியில் உள்ள வனப்பகுதியில் பயங்கரவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை 26 ஆவது நாளாக இன்றும் நீடிக்கும் நிலையில், பிரதமர் மோடி அப்பகுதிக்கு சென்றமை ஊடகங்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.



## தீப ஒளியில் ஜொலித்த சரயு நதிக்கரையில் 9 லட்சம் தீபங்கள் ஏற்றி கின்னஸ் சாதனை


தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு சரயு நதிக்கரையில் 9 லட்சம் தீபங்கள் ஏற்றி கின்னஸ் சாதனை படைக்கப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேச அரசு சார்பில் அயோத்தியில் கடந்த ஆண்டு 6 லட்சம் தீபங்கள் ஏற்றி சாதனை படைக்கப்பட்டது.

அதனை இந்த ஆண்டு முறியடிக்கும் வகையில் 12 லட்சம் தீபங்கள் ஏற்ற ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி அயோத்தியில் 3 லட்சம் தீபங்களும், சரயு நதிக்கரையில் 9 லட்சம் தீபங்களும் ஏற்றப்பட்டன.

இருளைக் கிழித்து சுடர்விட்ட தீபங்களால் சரயு நதிக்கரை முழுவதுமே பிரகாசமாக ஜொலித்தது. அதேபோல் அயோத்தியில் லேசர் மின்விளக்கு ஒளிர, வண்ணமயமான வான வேடிக்கை நிகழ்த்தப்பட்டது.

## நவம்பர் 8ஆம் திகதி வரை கனமழை நீடிக்கும் சென்னை வானிலை ஆய்வு மையம் அறிக்கை



வடகிழக்கு பருவமழை, தீவிரமடைந்து தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக பெய்து வருகிறது. நீர்நிலைகள் நிரம்பி வருவதால் விவசா-யிகளும் பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அணைகளில் இருந்து உபரி நீர் திறக்கப்பட்டிருப்பதால் ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

அதேவேளை, தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் பல்லாயிரக் கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்கள் மூழ்கியுள்ளன. வயல்களில் தேங்கிய மழைநீரை வெளியேற்றும் முயற்சியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். எனினும் நீர்வரத்து அதிகமாக இருப்பதால் பயிர்கள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் டெல்டா மாவட்டங்களில் நவம்பர் 8ஆம் திகதிவரை கனமழை நீடிக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், லட்சத்தீவு மற்றும் தென்கிழக்கு அரபிக்கடல் பகுதியில் நிலவும் குறைந்த காற்றமுத்தத் தாழ்வுப் பகுதி மற்றும் வட தமிழகத்தை ஒட்டி நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று கனமழை முதல் மிக கனமழைக்கு வாய்ப்பு உள்ளது. சென்னையைப் பொறுத்த வரை அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் மிதமான மழையும், ஒருசில சமயங்களில் கனமழையும் பெய்யக் கூடும். சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அரபிக் கடல் பகுதிக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக சேரன்மகாதேவியில் 13 செ.மீ. மழை பெய்துள்ளதென்றும், அம்பாசமுத்திரத்தில் 9 செ.மீ., மகாபலிபுரம், மண்டபம், பாளையங்கோட்டையில் தலா 8 செ.மீ. மழை பதிவாகி உள்ளது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பலம், பலவீனம் என்ன என்பதை நாங்கள் அறிந்திருக்க வேண்டும்

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு



நாங்கள் முப்படையை வைத்துக் கொண்டிருந்த காலம் போய் இன்று பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டே பேச்சுக்குச் செல்லுகின்றோம். அவ்வாறு இருக்கையில் எமது பலம், பலவீனம் என்ன என்பதையும் நான் அறிந்திருக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பில் உள்ள மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

இந்தநாட்டில்தற்போதையசூழ்நிலையில் வரலாறு காணாத அளவிற்கு மக்களின் எதிர்ப்பினை சந்தித்த அரசாங்கமொன்று செயலில் இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. உண்மையில் மிகமிகக் குறுகிய காலத்தினுள் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்த அரசென்று சொன்னால் அது இதுவாகத் தான் இருக்கும்.

பொதுஜன பெரமுன கட்சியின் ஐந்தாவதுமாநாட்டிலேயே இதனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ராஜபக்ஷ குடும்பத்தின் மூவர் மூன்று விதமான கருத்துகளைச் சொல்லியிருந்தார்கள். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டின் மோசமான நிலைமை குறித்த உண்மையான கருத்தை இதன் போது வெளியிட்டிருந்தார்.

கடந்த காலங்களிலே தாங்கள் ஒரு தனிக்கட்சி என்று சொல்லிக் கொண்டிருந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் அவர்களின் கட்சி என்பன மொட்டுவின் பங்காளிகள் என்பதை உறுதிப்படுத்தியிருந்தனர்.

இவை அனைத்தையும் தாண்டி நாங்கள் தற்போது மட்டக்களப்பின் நிலைமை குறித்துப் பார்த்தால், மட்டக்களப்பில் பசளை இல்லாமல் விவசாயிகள் மிகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் நிலை காணப்படுகின்றது. இவ்வாறு இருக்கையில் பொங்கலுக்குப் பின்னர் விவசாயிகள் மில்லியனர்களாகப் போகிறார்கள் என அலட்சியமான கதைகளையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கின்றார் கள். இதனை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

ஏனெனில் இந்த மாவட்டத்திலே விவசாயத்தை நம்பி வாழும் மக்களை மிகவும் கேவலப்படுத்தும் முகமாக பசளை இல்லாவிட்டாலும் விவசாயம் செய்ய வேண்டும், மில்லியனர்களாக ஆக முடியும் என்ற பொய்யான விடயங்களைச் சொல்வதன் ஊடாக பொருளாதாரம் தொடர்பாக அவருக்கு இருக்கும் அறிவே வெளிப்படுகின்றது.

இவர்கள் சொல்வது போல் குறைந்த விளைச்சலில் விவசாயிகள் மில்லியனர்களால் இந்த மாவட்டத்திலே மக்கள் அரிசியை விடுத்து வேறு எதையாவது சாப்பிட வேண்டும். ஏனெனில் விளைச்சல் குறையுமாக இருந்தால் நெல்லின் விலை அதிகரிக்கும் நெல் விலை அதிகரித்தால் அரிசியின் விலை அதிகரிக்கும். அரிசியின் விலை அதிகரித்தால் அன்றாடம் சாப்பிடுவதற்குக் கூட மக்கள் கஷ்டப்படும் நிலைமையே உருவாகும்.

எப்பாடுபட்டாவது விவசாயிகள் முட்டிமோதி விவசாயத்தில் ஈடுபட்டாலும், அடுத்து இருக்கும் மிக முக்கிய பிரச்சினை யானைப் பிரச்சினை. கடந்த சில நாள்களாக யானை தாக்கத்திற்குள்ளாகி எத்தனையோ பேர் மரணத்தைத் தழுவிக் கொண்டனர். இது மிகவும் கவலையான விடயம்.

கிழக்கை மீட்கப் போகின்றோம் என்று வந்தவர்களிடம் ஒரு கேள்வி. 2020ம் ஆண்டு செம்டெம்பர் மாதம் வரை கிழக்கு மாகாணத்தில் நல்லாட்சி அரசாங்கத்தினால் 670 கிலோ மீற்றர் யானை வேலி அமைக்கப்பட்டது. அக்காலத்தில் நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தாலும் கூட எமது மக்களுக்கு மிக முக்கிய பிரச்சினையாக இருக்கின்ற யானை வேலி விடயத்தைச் செய்திருந்தோம். வடக்கு கிழக்கிலே சுமார் 1,200 கிலோமீற்றர் வேலி அமைக்கப்பட்டுள்ளது.

அதன் பிறகு அரசாங்கத்துடன் இருந்து மக்களுக்கு நன்மை செய்யப் போகின்றோம், கிழக்கை மீட்கப் போகின்றோம் என்று வந்தவர்களால் 2020 செப்டெம்பர் தொடக்கம் 2021 செப்டெம்பர் வரை 40 கிலோமீற்றர் யானை வேலி தான் அமைக்கப்பட்டுள்ளது. அதிலும் தமிழர் வாழும் பிரதேசம் ஒன்றோ இரண்டு தான் இருக் கின்றது.

அபிவிருத்தி என்பது வெறுமனே கொங்கிறீற்றுப் பாதை போடுவதோ கிராமத்துக்கு ஒரு வேலைத்திட்டம் என்று சொல்லி காசைப் பிரித்துக் கொடுப்பதோ அல்ல. எமது மக்களின் வாழ்வாதார முன்னேற்றமே மக்களின் பொருளாதார நலனுக்கான அபிவிருத்தி என்பதை நாங்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

அந்த வகையிலே இன்று எங்கள் விவசாயிகள் உரமில்லாமல் களை நாசினிகள் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இன்று அரசாங்கத்துடன் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெறுமனே தென்னங் கன்றுகளைக் கொடுத்து வளர்க்கச் சொல்லுகின்றார்கள்.

ஆனால், அந்தத் தென்னங் கன்றுகளுக்கு வண்டு அடித்தால் அதனைத் தடைசெய்வதற்கான உரிய கிரிமிநாசினிகள் இங்கு இல்லை.

எங்களுடைய மக்களின் வாழ்வாதாரத்தை அழித்து உங்களின் பொருளாதாரத்தை வளர்த்தெடுப்பது அபிவிருத்தி அரசியல் அல்ல. அண்மையில் காணி அமைச்சர் எமது மாவட்டத்திற்கு வந்து யார் யாருக்கு காணிப் பத்திரம் கொடுத்தார் என்பதை அனைவரும் அறிவார்கள். எமது மக்களுக்கு வழங்கப்படவில்லை. அதேநேரம் இயற்கைப் பசளை தயாரிப்பதற்கு காணி வழங்குவதாகச் சொல்லியிருந்தார்கள். அவை அனைத்தும் அவர்களுடைய ஆதரவாளர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது.

எமது மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத்தலைவர் சவால் விட்டார் புலம்பெயர் நாடுகளில் இருந்து நிதியைக் கொண்டு வந்து அபிவிருத்தி செய்யுமாறு, ஆனால் என்னால் கொண்டுவரப்பட்ட கனேடிய முதலீட்டுத்திட்டத்தை அபிவிருத்திக் குழுத் தலைவர் என்ற பதவியைப் பயன்படுத்தி தடை செய்ததே சிவநேசதுரை சந்திரகாந்தன் தான்.

எங்களால் கொண்டுவரப்பட்ட திட்டத்தையும் தட்டிக் கழித்து விட்டு எமது மண்ணையும் காணியையும் அபகரித்து விற்ற நீங்கள் மில்லியனர், பில்லியனர் ஆகுவதற்கு எமது மாவட்ட மக்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள் என்று தெரிவித்தார்.



# மதுபானப் போத்தல்களுடன் பெண் ஒருவர் கைதாகினார்

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவில் உள்ள சேனையூர் பகுதியில் உள்ள வீடொன்றில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்டு வந்த சாராயம், பியர் போத்தல்களுடன் பெண்ணொருவரை சம்பூர் பொலிஸார் நேற்று (03) இரவு அவரின் வீட்டில் வைத்து கைது செய்துள்ளனர்.

இதன்போது பியர் போத்தல்கள் 66, பியர் டின் 49, சீல் சாராயம் 11 போத்தல்கள் என்பவற்றுடன் 36 வயதுடைய பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பூர் – சேனையூர் பகுதியில் சட்டவிரோதமாக சாராயம் மற்றும் பியர்கள்விற்பனைசெய்யப்படுகின்றன என சம்பூர் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த வீட்டினை பொலிஸார் முற்றுகையிட்டு சோதனைக்கு உட்படுத்தியபோது சட்டவிரோத மதுபானங்களுடன் குறித்த வீட்டில் இருந்த பெண் கைது செய்யப்பட்டார் என சம்பூர் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்ட பெண் சம்பூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையுடன் இவரை மூதூர் நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்துவதற்கான ஏற்பாடுகளை சம்பூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஆபாசப்பேச்சு கொடுத்து பணம் பறிப்பு செயற்பாடு

## அக்கரைப்பற்று பொலிஸாரால் இருவர் அதிரடியாகக் கைது



ஆண்களிடம் தொலைபேசியில் ஆபாசமாகப் பேசி, அவர்களின் நிர்வாணப் படங்களை நூதனமாகப் பெற்று பின்னர், அவற்றினை வைத்து சம்பந்தப்பட்டவர்களை மிரட்டி பணம் பறித்து வந்த இருவர் அக்கரைப்பற்று பொலிஸாரால் அதிரடியாகக் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒரு பெண் கணவனை இழந்த மூன்று பிள்ளைகளின் தாய் என்றும், மற்றையவர் திருமணமான ஆண் எனவும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் பொலிஸார் அக்கரைப்பற்று நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தபோது, இருவருரையும் 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தங்கள் சூழ்ச்சியில் மாட்டிக்கொண்ட ஆண் ஒருவரிடம் ஐந்து லட்சம் இலங்கை ரூபா பணத்தை மிரட்டிக் கேட்ட மேற்படி நபர்கள், அந்தப் பணத்தை குறிப்பிட்டதொரு இடத்தில் வைக்கச் சொல்லி விட்டு, பின்னர் அதனை எடுப்பதற்கு முயற்சித்தபோதே, அங்கு மறைந்திருந்த பொலிஸாரிடம் அகப்பட்டனர். பாதிக்கப்பட்ட ஆண், ஏற்கனவே இந்தப்பெண்தரப்பிடம் ஆறு லட்சம் இலங்கை ரூபா பணத்தை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தனது முகத்தை கடைசி வரை காண்பிக்காமல் தொலைபேசி மூலம் ஆண்களைத் தொடர்பு கொண்டுள்ள மேற்படி பெண், ஆபாசமாக அந்த ஆண்களை வீடியோ அழைப்பில் நிர்வாணமாக நிற்கும்படி செய்து, அதனை நூதனமாக அந்தப் பெண் தனது கைபேசியில் பதிவு செய்து கொண்டார். பின்னர் அந்தப் படங்களை வைத்து, மிரட்டி பெருந்தொகைப் பணம் பெற்று வந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

# 66 ஓட்டங்களால் ஆப்கானை வீழ்த்தி இந்திய அணிக்கு முதலாவது வெற்றி




ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் குழு 2 க்கான போட்டியில், இந்திய அணி 66 ஓட்டங்களால் ஆப்கானிஸ்தானை வென்றது.

நேற்றைய நாளில் இரண்டாவதாக நடைபெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பிலீடுபட முடிவெடுத்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, 20 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 210 ஓட்டங்களைக் குவித்தது. இது இந்த ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் அணியொன்று பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாகும். ரோஹித்சர்மா 74 ஓட்டங்களையும் கே.எல்.ராகுல் 69 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். ஆப்கானிஸ்தான் அணியின் குல்பதீன் மற்றும் கரீம் ஜெனட் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 211 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களையே பெற முடிய, இந்திய அணி 66 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. கரீம் ஜெனட் ஆட்டமிழக்காது 42 ஓட்டங்களையும் மொஹமட் நபி 35 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இந்தியக் அணியின் பந்துவீச்சில், மொஹமட் ஷமி 3 விக்கெட்டுக்களையும் அஸ்வின் 2 விக்கெட்டுக்களையும் பும்ரா மற்றும் ஜடேஜா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக ரோஹித் சர்மா தெரிவுசெய்யப்பட்டார்.

இம்முறை ரி-20 உலகக் கிண்ணத்தொடரில் 3 போட்டிகளில் விளையாடியுள்ள இந்திய அணி, நேற்றைய நாளில்தான் தனது முதலாவது வெற்றியைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கடுமையாக போராடியது ஸ்கொட்லாந்து நியூசிலாந்து 16 ஓட்டங்களால் வெற்றி




ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சூப்பர்-12 சுற்றின் நேற்றைய முதலாவது போட்டியில் நியூசிலாந்து அணி, ஸ்கொட்லாந்தை 16 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்கொட்லாந்து அணி, முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட நியூசிலாந்து அணி, 20 ஓவர்கள் நிறைவில், 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 172 ஓட்டங்களை எடுத்தது. மார்டின் கப்டில் 93 ஓட்டங்களையும்க்ளென்பிலிப்ஸ் 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ஸ்கொட்லாந்து அணியின் ப்ரட் வீல் மற்றும் சபியான் சரீப் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் மார்க் வாட் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 173 என்ற வெற்றி இலக்கை நோக்கிக் களமிறங்கிய ஸ்கொட்லாந்து அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்த நிலையில், 156 ஓட்டங்களையே பெற முடிய, நியூசிலாந்து அணி 16 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. மைக்கேல் லீஸ்க் ஆட்டமிழக்காது 42 ஓட்டங்களையும் மத்தியு க்ரொஸ் 27 ஓட்டங்களையும் எடுத்தனர். நியூசிலாந்து அணியின் ட்ரெண்ட் போல்ட் மற்றும் இஷ் சோதி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் டிம் சவுத்தி ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக மார்டின் கப்டில் தெரிவுசெய்யப்பட்டார்.

குழு 2 க்கான இந்தப்போட்டியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி, 3 போட்டிகளில் 2 வெற்றிகள், 4 புள்ளிகளோடு அணி வரிசையில் மூன்றாமிடத்தில் உள்ளது. ஸ்கொட்லாந்து, தான் விளையாடிய 3 போட்டிகளிலும் தோல்வியடைந்துள்ளது.

## இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக டிராவிட்

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராகப் பணியாற்றும் ரவி சாஸ்திரியின் பதவிக்காலம் ரி-20 உலகக் கிண்ணத் தொடருடன் முடிவடையும் நிலையில், ராகுல் டிராவிட் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.



Image tweeted by @BCCI

அந்தப்பதவிக்கு ராகுல் டிராவிட்டை நியமிக்க தீர்மானித்த இந்தியக் கிரிக்கெட் சபை, அது தொடர்பாக அவருடன் பேச்சு நடத்திவந்தது. ஆரம்பத்தில் குறித்த பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்திருந்த டிராவிட், பின்னர் பல்வேறு கட்டப் பேச்சுக்களுக்கும், இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராகவுள்ள அவரது நண்பர் கங்குலியின் வேண்டுகோளுக்கும் பின்னர் தனது சம்மதத்தைத் தெரிவித்தார் எனக் கூறப்படுகிறது.

அதன் பின்னதாக, முறைப்படி தலைமைப் பயிற்சியாளர் பதவிக்கு அவர் தனது விண்ணப்பத்தைச் சமர்ப்பித்திருந்தார். அவரைத் தெரிவுசெய்ய இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தீர்மானித்ததன் பின்னர் வேறு யாரும் அந்தப் பதவிக்கு தமது விண்ணப்பங்களை அனுப்பவில்லை என்று தெரிவிக் கப்படுகிறது. ராகுல் டிராவிட்டைத் தவிர யாரும் விண்ணப்பம் செய்தாத நிலையில், நேரடியாகப் போட்டி களின்றி அவர் தற்போது இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ரி-20 உலகக் கிண்ணத் தொடர் நிறைவடைந்து, அடுத்ததாக நடைபெறவுள்ள நியூசிலாந்துடனான தொடரிலிருந்து டிராவிட்டின் பணிக்காலம் ஆரம்பிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனம் குறித்து ராகுல் டிராவிட் கூறுகையில் "இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டமை மிகப்பெரிய கவுரவம். அந்தப் பணியை எதிர்நோக்கிக் காத்திருக்கிறேன். ரவி சாஸ்திரியின் தலைமையின் கீழ் இந்திய அணி சிறப்பாக செயல்பட்டது. அணியுடன் பணிபுரிந்து முன்னோக்கி எடுத்துச் செல்வேன் என்று நம்புகிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## உயிரியல் பாதுகாப்பு வளைய விதி மீறல்; ரி–20 தொடரிலிருந்து நடுவர் கோவ் விலகல்

கொரோனா உயிரியல் பாதுகாப்பு வளைய விதியை மீறிய குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருந்த இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த கிரிக்கெட் போட்டி நடுவரான மைக்கல் கோவ், ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் எஞ்சியிருக்கும் போட்டிகளில் நடுவராக செயற்படமாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்காக ஏற்படுத்தப்பட்டிருந்த உயிர்ப்பாதுகாப்பு விதிமுறைகளை மீறிய நிலையில் அதற்காக ஆறு நாள்கள் தடைக்காலத்தினைப் பெற்றிருந்தார். குறித்த தடைக்காலத்தினையடுத்து அவர் மீண்டும் இந்தத் தொடரில் நடுவராகப் பணியாற்றுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவர் அந்தக் கடமையில் ஈடுபடமாட்டார் என அறிவிக்கப்பட் டுள்ளது.

முன்னதாக கடந்த மாதம் 31ஆம் திகதி நடைபெறவிருந்த போட்டியில் நடுவராகப் பணியாற்ற நியமிக்கப்பட்ட மைக்கல் கோவ், உயிர்ப்பாதுகாப்பு வளைய விதிமுறைகளை மீறியதனையடுத்து அந்தப் போட்டியில் கடமையாற்ற அனுமதிக்கப்படாததோடு, தண்டனையாக தடைக்காலத்தினையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# பலமான பொருளாதார கட்டமைப்புக்களை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பு ஆகும்

## அமைச்சர் டக்ளஸ் திட்டவட்டம்



கிடைத்திருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி சாத்தியமான வழிகளின் ஊடாக பலமான பொருளாதார கட்டமைப்புக்களை எமது மக்களுக்கு உருவாக்கிகொடுக்க வேண்டும்என்பதே எனது எதிர்பார்ப்பு என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

முகமாலையில் சுமார் 316 ஏக்கர் கண்ணிவெடி அகற்றப்பட்ட காணிகளை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் –

1987 ஆம் ஆண்டு இந்திய – இலங்கை உடன்படிக்கை மூலம் கிடைத்த வாய்ப்பை, சரியாகப் பயன்படுத்தி வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண சபை முறையை முழுமையாக அமுல்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களுக்கான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை அன்று எனக்கிருந்தது.

இதே கொள்கையையே நான் இன்றும் கொண்டுள்ளேன். அப்போது இதை எதிர்த்தவர்களும் பின்னர் மாகாணசபை முறையை ஏற்றுக் கொண்டு தேர்தல்களில் போட்டியிட்டு பதவிகளையும் பெற்றுக் கொண்டனர்.

அப்போதே இதை ஏற்றுக் கொண்டு அமைதிவழியில் – நல்லிணக்க வழிமுறையில் – தமிழ் மக்களுக்குத் தீர்வுகாண முனைந்திருந்தால் அதன் பின்னர் ஏற்பட்ட யுத்த அழிவுகளிலிருந்து மக்களைப் பாதுகாத்திருக்க முடியும். அவ்வாறில்லாமல், அழிவு யுத்தத்தைத் தொடர்ந்ததன் காரணமாகத்தான் தமிழ் மக்கள்பேரழிவுகளைச்சந்திக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால்தான் சொல்கிறேன், இந்த அழிவுகள் ஏற்பட்டிருக்கக் கூடாது என்பதே என்னுடைய எண்ணமாக இருந்தது.

எனவே, தேசிய நீரோட்டத்தில் இணைந்து நாடாளுமன்ற ஜனநாயகத்தின் ஊடாக தேசிய நல்லிணக்கத்தை வளர்ப்பதன் மூலம் தமிழ் மக்களுக்கான ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவதே இலக்காக இருக்கின்றது. – எனவும் அவர் தெரிவித்தார் .

மேலும், தனக்கு கிடைத்திருக்கின்ற அமைச்சு அதிகாரத்தின் ஊடாக பலமான பொருளாதார கட்டமைப்புக்களை எமது மக்களுக்கு உருவாக்கி கொடுக்க வேண்டும் என்பதே தன்னுடைய எதிர்பார்ப்பு என்று தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தச் சந்தர்ப்பதை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

## 50 கோடி அமெ. டொலர் நிதி

# ஒப்பந்தத்தில் உலக வங்கியுடன் இலங்கை அரசு கைச்சாத்து


இலங்கை அரசாங்கமும் உலக வங்கியும் 50 கோடி அமெரிக்க டொலருக்கான நிதி ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

உலக வங்கியின் தெற்காசியாவுக்கான உப தலைவர் ஹார்ட்விக் ஷாப்பர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இலங்கையின் விவசாய விநியோகச் சங்கிலியை வலுப்படுத்தும் வகையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதன்மூலம், இலங்கையின் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள கிராமப்புற சமூகங்களில் வாழும் சுமார் ஒரு கோடியே 60 லட்சம் மக்கள் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மக்கள் கொவிட்டை மறந்து விட்டனர் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்



மக்கள் கொவிட் பெருந்தொற்றைமறந்து விட்டனர் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் துணைச் செயலாளர் வைத்தியர் நவீன் டி சொய்சா செய்தியாளர் சந்திப்பில் வைத்து கருத்து வெளியிடுகையில் -

நாட்டில் கடுமையான கொவிட் தொற்று நிலைமை காணப்பட்டது என்பதை மக்கள் மறந்து விட்டனர்.

எங்களது ஆலோசனைகளை மக்கள் உதாசீனம் செய்கின்றனர். பொதுப் போக்குவரத்தில் மக்கள் பாதுகாப்பாக செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.

கொவிட் ஒழிப்பு செயலணியால் எடுக்கப்படும் தீர்மானங்களை அமுல்படுத்துவதில் அமைச்சு மக்கள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

பயணக்கட்டுப்பாடு காணப்பட்ட காலத்திலும் மக்கள் சுற்றுலாத்தளங்களில் கூடியிருந்தனர்.

நாட்டில் மீண்டும் ஒரு கொவிட் பிறழ்வு தாக்கி மீண்டும் ஓர் அலை ஏற்பட்டால் அது பொருளாதாரத்தை மிக மோசமாகப் பாதிக்கும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# வானில் மறைத்துச் சென்ற கஞ்சாவுடன் இருவர் கைது



வான் ஒன்றில் மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட கஞ்சா மீட்கப்பட்டதுடன், சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கிளிநொச்சி – பாரதிபுரம் பகுதியிலிருந்து மட்டக்களப்பிற்கு வான் ஒன்றில் சூட்சுமமாக மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட நிலையில் பொலிஸாருக்கு இரகசிய தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அறிவியல்நகர் பகுதியில் கிளிநொச்சி குற்ற விசாரணை பிரிவின் சப் இன்ஸ்பெக்டர் கருணாரட்ணம் ஜெசிந்தன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் வாகனத்தை மறித்து சோதனை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது 10 கிலோ 845 கிராம் எடையுள்ள கஞ்சா மீட்கப்பட்டமையுடன், சந்தேக நபர் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அதேவேளை வாகனத்தையும் பொலிஸார் தமது பொறுப்பில் எடுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் இருவரும் சகோதரர்கள் எனவும், ஒருவர் சாந்தபுரம் பகுதியைச் சேர்ந்தவர் எனவும், மற்றையவர் பாரதிபுரம் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் சான்று பொருள்களுடன், கைது செய்த நபர்களையும் பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிறுத்தியுள்ளனர்.

மேலதிக விசாரணைகளுக்கான 7 நாள்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்வதற்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளதாகக் கிளிநொச்சி பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நைட்ரஜன் திரவ உரத்துடன் இலங்கை வந்த இந்திய விமானம்

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு லட்சத்து 45 ஆயிரத்து 152 லீற்றர் நனோ நைட்ரஜன் திரவ உரத்தின் பெரும்தொகை இன்று காலை இலங்கை வந்தடைந்தது.

இரண்டு பகுதிகளாக உரக் தொகுதிகளை ஏற்றி வந்த இரண்டு விமானங்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இன்று அதிகாலை தரையிறங்கின எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திரவ நைட்ரஜன் உரம் விவசாய அமைச்சின் களஞ்சியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட உள்ளதாக அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.11.2021இல் வெளியிடப்பெற்றது.